**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC. 903/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW6/PW-4 | Village: |
| Name :, மருத்துவர் பிரபாகர் | Age :50 |
| | Taluk : |
| Father's/Husband's Name : | |
| | Religion : |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 25.09.2024.**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 07.02.2018 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் மாலை 4.05 மணியளவில் சுமார் 40 வயது மதிக்கதக்க ஆடுதுறை அம்மன்கோவில் தெருவை சேர்ந்த கல்யாணம் மகன் செந்தில் என்பவர் தாமாக சிகிச்சைக்கு வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது அன்றை தினம் காலை

10.30 மணியளவில் அவரது கடை அருகே ஒரு தெரிந்த நபர் பைப்பால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. அவரது இடது காதில் 2X0.5X0.5 செ.மீ அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. 2. அவர் தலை வலிப்பதாக கூறினார். அவருக்கு முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு தலை பகுதியில் சி.டி ஸ்கேன் எடுக்க பரிந்துரை செய்து அவருக்கு எடுக்கப்பட்ட சி.டி. ஸ்கேன் பார்வையிட்டதில் அவருக்கு எலும்பு முறிவு ஏதும் இல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கி காயச்சான்று வழங்கினேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி காயம்பட்ட நபர் 11.02.2018 ம் தேதி சிகிச்சை முடித்து மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். மேற்படி காயங்கள் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜரில் இருந்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.09.26 16:47:13 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**